1973 நவம்பர் 27]

(i) The exemption limit has been raised from one ground to two grounds;

(ii) In the case of persons owning more than two grounds, urban land tax will be levied only on the extent in excess of two grounds at the appropriate rate instead of on the entire extent owned as hitherto;

(iii) The rebate of tax allowed under Section 26 (1) of the Act on lands with buildings occupied by the owners solely for residential purpose has been increased from 25 per cent to 50 per cent;

(iv) The benefit of exemption under Section 29 (k) has been extended to all lands owned by religious, philanthrapic or charitable institutions notified by Government instead of only to those lands used by the philanthrapic institutions as under the earlier provisions.

The Amended Act came into force from 1—7—1972.

அந்தச் சட்டத்திலேயே மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சலுகைகள்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவாரானால், சம்பந்தப்பட்ட அதிகாரி யிடத்தில் சொல்லப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Ex-Servicemen colony near Ayanavaram

* 435 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether the Ex-Servicemen residing at Kumaramangalam Colony at Ayyanavaram in Madras have requested during July 1973, for the assignment of the land in which they reside; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) சென்னை, ஜெனரல் குமாரமங்கலம் காலனியில் வாழும் முன்னாள் படைவீரர் அங்கத்தினர் தாங்கள் குடியேறியுள்ள நிலங்களைத் தங்களுக்கு ஒப்படை செய்து தருமாறு கேட்டுள்ள முறையீடுகள் அச்சங்கத் திடமிருந்து பெறப்பட்டுள்ளன.

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்த முன்னாள் ராணுவ வீரர்கள் குடியிருந்து வருகின்ற இடம் தமிழக அரசுக்குச் சொந்தமானதா அல்லது மத்திய அரசு நிலமா? எப்பொழுது இந்த ஆய்வு முடிந்து அவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த நிலம் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமானது. மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒரு குறிப்பிட்ட நிலத்தை அங்காடி விலைக்கு, மார்க்கெட் வால்யூ, மாநில அரசுக்கு விற்றுவிட அவர்கள் விரும்புவதாகவும், மாநில அரசு ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு நிலத்தை விற்று விடலாம் அல்லது மாநில அரசு தாம் தகுதியெனக் கருதுகிற முறையில் அந்த நிலத்தை முடிவு செய்யலாம் என்றும் 7—11—1970-ம் தேதி நமக்கு தெரிவிக்கப் பட்டது. மார்க்கெட் விலையைப் பற்றி அறிக்கைகள் கேட்கப் பட்டிருக்கின்றன.

இதற்கிடையிலே ஸ்லம் கிளியரன்ஸ் போர்ட் அந்தப் பகுதியைக் குடிசைப் பகுதியாக அறிவித்து, சில நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. தமிழ் நாடு குடிசைப் பகுதிகள் சட்டத்தின் 3 (1) பிரிவின்கீழ் குடிசைப் பகுதியாக அரசு அறிவித்துள்ளது. தவிர, அடிப்படை வசதிகளை அளிக்கும் பொருட்டு, மேற்சொன்ன பகுதியில் இந்திய அரசு சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக குடிசைப் பகுதி மாற்று வாரியம் அந் நிலங்களை தம் வசம் எடுத்துக் கொண்டுள்ளது. இதுவரை ரூ 3,21,973 செலவிடப்பட்டிருக்கிறது. இதற்கிடையிலே, அந்த முன்னாள் படை வீரர்கள் அந்தப் பகுதியை குடிசை மாற்றுப் பகுதியாக அறிவித்ததை ரத்து செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்படுகின்றன.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, அந்த ராணுவ ஊழியர்கள் புறம்போக்கு நிலம் ஏதாவது கேட்டார்களா பயிர் செய்வதற்கு? அப்படியென்றால், அதிலே அரசாங்கம் என்ன அக்கறை காட்ட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவசாயத்திற்குக் கேட்டதற்கான குறிப்பு என்னிடத்திலே இல்லை. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் குமாரமங்கலம் காலனியில் இருப்பவர்கள் அந்த இடத்தைத் தங்களுக்கு விற்று விடுமாறு கேட்டிருக்கிறார்கள்.